2. விதி 110–ன்கீழ் அறிக்கை

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் தீட்டப்படும் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், நலத் திட்ட உதவிகளை மக்களிடம் எடுத்துச் செல்வதிலும், அரசின் வளர்ச்சி நோக்கங்களை எய்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் பொதுச் சேவையை நடைமுறைப்படுத்துவதிலும் அடித்தளமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள்.

இதேபோன்று, எதிர்காலத் தூண்களாக விளங்கும் மாணவ, மாணவியரை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், சிந்தனையாளர்களாகவும், செயல் வீரர்களாகவும், புகழ் மிக்கவர்களாகவும் ஆக்கும் சிறந்த செல்வமாம் கல்விச் செல்வத்தைப் போதிக்கும் உன்னதமான, தன்னலமற்ற பணியை மேற்கொள்பவர்கள் ஆசிரியர்கள்.

இப்படிப்பட்ட இன்றியமையாப் பணியை ஆற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் முக்கியப் பங்கை எனது தலைமையிலான அரசு நன்கு உணர்ந்துள்ளது. அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. அந்தவகையில், 1–1–2012 முதல் மத்திய அரசு அலுவலர்களுக்கான அகவிலைப் படியை, அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 7 சதவீதம் மத்திய அரசு உயர்த்தியதுபோல், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் 1–1–2012 முதல் அகவிலைப் படியை 7 சதவீதம் உயர்த்தி வழங்க (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 1–1–2012 முதல் கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள், வருவாய்த் துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்கள், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள், ஊராட்சி உதவியாளர்கள், எழுத்தர்கள் மற்றும் வழக்கமாக அகவிலைப்படி அளிக்கப்படும் அனைவருக்கும் பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் என சுமார் 18 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வுமூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,383.49 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 11–20

3. அறிவிப்புகள்

(அ) சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குள் கைபேசி கொண்டுவர அனுமதி மறுப்பு மற்றும் உறுப்பினர்களுக்குக் கைபேசி பாதுகாப்பு மற்றும் Smart Card வசதிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 87 (x)–ன்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குள் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தங்களின் கைபேசியினை எடுத்து வரக்கூடாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் கைபேசியைப் பத்திரமாக பேரவை மண்டபத்தின் வெளியிலே வைத்துவிட்டு பேரவையினுள் செல்வதற்கு வசதியாக புறாக் கூண்டு அறைகள் (Pigeon Holes) பூட்டு, சாவி, வசதிகளுடன் பேரவையின் மேல்புறம் மற்றும் கீழ்ப்புறத் தாழ்வாரங்களில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண்களைக் கொண்ட அறைகள்